# செய்யும் எல்லா நற்காரியங்களிலும் யோகியின் துணை நாடல்

எங்கு நானிருப்பினும் செய்வதேது ஆயினும்
ஏகனாயிருப்பினும் கூட்டமோடு ஆடினும்
பொங்கு கோபமாயினும் பூஞ்சிரிப்பு ஆயினும்
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

நல்லனாய் இருப்பினும் அல்லவேறு ஆயினும்
கள்ள ஞானப் பொய்மையோடு காதல் பேச்சு பேசினும்
பள்ளம் பாயும் நீரைபோல காமம்வேகம் ஆயினும்
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

கடந்து வந்த பாதையில் நடந்து போன வேதனை
கிடங்குபோலப் பூட்டியே அடங்கி வாதை செய்யுமே
தடங்கள் யாவும் மாற்றி வைத்து தம்மை மேலும் ஏற்றியே
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

வாடி நின்ற பூமிபோல் வானம் பார்த்த ஏரிபோல்
பாடிபாடித் தன் இணை தேடுகின்ற பேடைபோல்
தேடித்தேடி என்னுள்ளே உந்தன் நாமம் சொல்கிறேன்
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

வாழ்க்கை யிங்குவேதனை வாய்மை யாவும் சோதனை
தாழ்வுறாத எண்ணம் வந்து எந்தன் நெஞ்சில் தங்குவாய்
சூழ்ந்து வந்த ஊழ்வினை சுற்றிநின்று தாக்கையில்
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

என்னுள் வந்து தங்கி நீ இரும்பில் செய்த வாளதாய்
வெண்ணைய் பூசித் தோகையோடு வீசுகின்ற கருவியாய்
நாணுகின்ற செய்கையாவும் நான் துணிந்து நிற்கவே
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

சுற்றி நின்ற உறவுகள் சோம்பலின்றி வாழவும்
பற்றி நின்ற நட்புகள் பண்பு கூடி பேசவும்

கற்றறிந்த சபையிலே எந்தன் வாக்கு வெல்லவும்
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

பச்சை நெல்லு வயலிலே வெள்ளை கொக்கு காட்சியாய்
இச்சை கொண்ட என்னுள்ளே உந்தன் ரூபம் ஜோதியாய்
அச்சுவெல்லக் கட்டியாக ஆணையாகத் தோன்றுவாய்
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

செம்மையாய் சிறப்பபினோடு சேர்ந்துவந்த செல்வமாய்
தன்மையாய்த் தடங்கலின்றி தாழ்ந்துவந்த மேகமாய்
உண்மையாய் உணர்ச்சியாய் உயர்வடைந்த காதலாய்
யோகிராம் சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்

ஆண்டகை அணைத்த கை அன்பு அன்பு செய்ததை
தூண்டலைத் துளைத்தலைத் தோன்றி நின்ற ஜோதியை
விண்ட பால குமரனிங்கு எழுதிவந்த பாட்டிலே
யோகிராம் சுரத்குமார் நின்று என்றும் ஆளுவாய்